**CC.No.35 /2025 (JM.No.II, DHARMAPURI.)**

**31.07.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW9 : திரு. சின்னராஜ்(சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்–ஓய்வு)**

**முதல் விசாரணை**

கடந்த 17.04.2024 ம் வருடம் கிருஷ்ணாபுரம் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பொறுப்பு அலுவலராக இருந்த போது காலை சுமார் 10.00 மணிக்கு மூர்த்தி த/பெ மாதையன், ஏ.முருக்கம் பட்டி என்பவர் அவருடைய அப்பா மாதையன் தருமபுரி அரசு மருத்துவமனையில் வாய் பேச முடியாத இருந்ததால் அவருடைய மகனான மூர்த்தி என்பவரிடம் வாக்குமூலம் பெற்று குற்ற வழக்கு எண். 62/2024, இதச பிரிவு 279, 337 ன் கீழ் TN 29 CU 4226 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். சம்பந்தபட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் பிற ஆவணங்களை குற்றவியல் நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், பிற ஆவணங்களை எங்களுடைய உயர் அதிகாரிக்கு அனுப்பியும், அன்றைய தினமே புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு காலை 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான கோவிந்தராஜ், கௌரப்பன் ஆகியோர்களின் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். பின்பு இவ்வழக்கின் சாட்சிகளான மூர்த்தி, ஜெயராமன், பெரியசாமி, மாரியப்பன் ஆகிய சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 18.04.2024 அன்று விபத்தில் காயம்பட்ட மாதையன் இறந்துவிட்டதால் இவ்வழக்கின் சட்டபிரிவு 279, 337 லிருந்து 279, 304 ஏ வாக சட்டபிரிவு மாறுதல் செய்து, சட்டபிரிவு மாறுதல் அறிக்கையை குற்றவியல் நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இத்துடன் என்னுடைய புலன் விசாரணையை முடித்து கொண்டு வழக்கின் மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் மேற்பார்வைக்கு வழக்கு கோப்புகளை ஒப்புவித்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, 18.04.2024 தேதியிட்ட சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த நபர் மாதையன் ஆவார். புகார் வாக்குமூலம் நான் மாதையனிடம் பெறவில்லை என்றால் சரிதான். அவர் வாக்குமூலம் கொடுக்கும் நிலையில் இல்லை என்பது தவறு என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சம்பவயிடத்தில் வைத்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றாலும், சாட்சிகளிடம் சொன்ன இடத்தில் வைத்து வாக்குமூலங்கள் பெறவில்லை என்றாலும், வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து

வழக்கிற்கு ஏற்றவாறு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறந்து போன மாதையனின் கவனகுறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், அதனை மறைத்து இறந்து போன மாதையன் என்பவரின் மகன் மூர்த்தி என்பவர் கொடுத்த பொய்யான புகாரின் பேரில் சரியாக முதல் விசாரணை மேற்கொள்ளாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

CC.No.35 /2025 (JM.No.II, DHARMAPURI.)

31.07.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW10 : திரு. ஷபி( காவல் உதவி ஆய்வாளர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது காரிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.04.2024 ம் தேதி கிருஷ்ணாபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்றைய விடியற்காலை 05.00 மணிக்கு தருமபுரி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற இன்டிமேசன் பேரில் ஏ.முருக்கம்பட்டியை சேர்ந்த மாரியப்பன் மகன் மாரியப்பன் சிகிச்சையில் இருந்த போது சிகிச்சை பலனின்றி இறந்து போன மேற்படி மாதையனின் இன்டிமேசன் பெற்று காலை 05.00 மணிக்கு ஏற்கனவே கிருஷ்ணாபுரம் காவல் நிலைய குற்ற எண். 62/2024, சட்டபிரிவு 279, 337 பிரிவில் முதல் புலன் விசாரணை முடித்து இருந்த நிலையில் மேற்படி வழக்கை என்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய விடியற்காலை 05.00 மணிக்கு 279, 337 ஆக இருந்த பிரிவை 279, 304 ஏ ஆக பிரிவு மாற்றம் செய்து அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டதில் ஏற்கனவே வழக்கு பதிவு செய்து, முதல் புலன் விசாரணை செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சின்னராஜ் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். சம்பவயிட சாட்சிகளான வழக்கின் வாதி மூர்த்தி, ஜெயராமன். பெரியசாமி, மாரியப்பன் ஆகியோர்களை விசாரித்து முதல் விசாரணை முடித்து கொண்டு அவரிடம் சொன்ன சாட்சிகள் என்னிடமும் அதே கூறியதால் மேற்கண்ட சாட்சிகளை தனியாக வாக்குமூலம் எதுவம் பதிவு செய்யாமல் அவரிடம் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சவகிடங்கிற்கு அருகில் இருந்த இவ்வழக்கில் இறந்து போன மாரியப்பன் மகன் மாதையன் பிரேதத்தின் மீது காலை 07.00 –09.00 மணி வரை சாட்சிகள் மூர்த்தி, மாதம்மாள், சக்திவேல், மாரியப்பன், சிவலிங்கம் ஆகியோர்கள் முன்னிலைலையிலும், பஞ்சாயத்தார்கள் தணிகாசலம், மாரியப்பன், பழனி, பரமசிவம், பெரியசாமி முன்னிலையிலும் பிரேத விசாரணை முடித்து பிரேதத்தை 18.04.2024 ம் தேதி காலை 09.05 மணிக்கு பெண் தலைமை காவலர் 684 திருமதி.மகேஷ்வரி என்பவரிடம் பிரேத விசாரணை முடித்து பிரேத உடற்கூறு ஆய்விற்காக உரிய வேண்டுகோள் கடிதத்துடன் அரசு மருத்துவமனை சட்ட சார்ந்த மருத்துவ அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டி கடவு சீட்டு கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்பு வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் மேற்பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர்

என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

ஒப்பம்/−இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.